உ

சிவமயம்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: ...)

24-3
9888
Q25:A173

பாண்டிநாட்டிலுள்ள
கோயிலூர்த்திருநெல்லையம்மை

# பிள்ளைத்தமிழ்.

---

இஃது,

தஞ்சாவூர்ச் சதாவதானம்
ப்ரம்மஸ்ரீ- சுப்பிரமணிய ஐயரவர்களால்
இயற்றப்பெற்றுக்
கோயிலூர் மடாலயத்திறைவராகிய
ஸ்ரீ-வீரசேகரஞானதேசிகரவர்கள் விருப்பின்படி
சுப்பராயசாமிகளால்

சிதம்பரம்
ப்ரம்மவித்தியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

---

விகாரி௵ சித்திரை௴
இதன்விலை அணா - ௪.

உ

சிவமயம்.

# சிறப்புக்கவி.

சுப்பராய சுவாமிகளியற்றியது.

ஆசிரியவிருத்தம்.

நற்றமிழ்ப்பாண்டிநாட்டினிலெல்லா
நலங்களுமலிசமிவனத்திற்
கொற்றவாளீசர்மருங்குறையருளாங்
குணமுறு திருநெலைமா தின்
றுற்றசீர்ப்பிள்ளைத்தமிழினைநன்கு
தொடுத்தனனுலகெலாம்புகழப்
பெற்றிடுசதாவதானிமுற்குலச்சுப்
பிரமணியப்பிரபலனே.

24-3

உ

சிவமயம்.

# கோயிலூர்த் திருநெல்லையம்மை

# பிள்ளைத்தமிழ்.

## விநாயகர் துதி.

நீர்கொண்ட செஞ்சடைத் தாதையுந் தன்னைமுன் னினையாது பின்னினைப்ப, வினையுமக்கருமத்தை யெளிதி னிற்புன்மூர னேரத்தின் முற்றுவித்துத்,— தேர்கொ ண்டவிக்கிநே சப்பெயர்ப்பொதுமையைத் தேற்றியெத் தகையரோனுஞ், செய்வினை முன்முன்னின் முடிக்குங்க டாசலச் சிந்துரத்தடிமுடிப்பாஞ்,—சீர்கொண்டபுவன ங்கள் காந்தமுன்னயமெனச் சேட்டிக்கும்வண்ணமின் று,செப்புபலகடநீருளே தோன்றுமிரவிபோற் றிகழினு மியாக்கைதோறு,— மார்கொண்டவேகமாம் பொரு ளுக்கபேதவரு ளாய்ப்புனற்றண்மையெனவா, யாநந்த வுருவமாங் கோயிலூர்த்திருநெல்லை யம்மைசொற் றமி ழ்தழையவே.

## காப்புப்பருவம்.

### திருமால்.

சீர்மேவுமண்டகோடிகளென்னும்வாலுகச் சிறுசோறமைத்தகண்ட, சிற்பரமதாமளப்பரியபெருவெளியினைச் சிற்றிலாக்கோலியதனு,—ளார்மேவுமுக்கட்பரஞ்சோதிகண்டருளி னகமகிழவாடல்புரிதந், தழகுமலி கழனியம்பதியில்வளர்திருநெல்லை யம்மையைநயந்து காக்க,— பார்மேவுபாரதப்போரினிற்றேர்மிசைப் பார்த்திவன்சோர்வுதெளிவான், பாய்ந்துதிரிமனமாவைவயிராக்கியக்கயிறு பற்றியுளிழுத்துமும்மை,--நீர்மேவுவினையொறுத்திடல்குறித்தாங்குகையி னிலவுகுசையதனையீர்த்து, நெடியகசைகொண்டோங்கிமெய்ஞ்ஞானமழைபெய்து நின்றருள்கருங்கொண்டலே. (க)

### சிவபெருமான்.

துளவமுங்கதிர்தெவ்வு மணியுமொன்றுரமெய்து சுரவரன்கவின்மல்கு கண்ணிணைச் சாத்துபு,தொழுதலுந்தழல்பில்கு திகிரிபண்டருள்செய்தனிசுகுணன்புறுசெல்வம் விண்ணவர்க்காக்கிய,- ளாநறுங்கனிவெள்கு கரியகந்தரன்வைகல் கருதுமன்பினர்பையு ளண்ணவொட்டாப்பரன்,கருணையங்கடல்பொய்யில் கதிவழங்குறுவ

ள்ளல் கமலம்வென்றொளிர்செய்யபொன்னடிப்போற்று
து,-மளவிகந்தெழுமைய லனையவன்கொளநல்கு மதிகசு
ந்தரவல்லி பெண்மையிற் சீர்த்தவ,ளணிசெழுந் திருவெ
ள்ளையரிவைகும்பிடுதெய்வ மமலைசந்தனசய்ய வெம்மு
லைக்கோற்றொடி,—வளநிரம்பியசெய்யுண் மடவனம்பெ
ரிதுள்ள மகிழ்வொடும்பெடைபுல்லி மென்மலர்ச் சே
க்கையில்மணமயர்ந் தினிதல்கு கழனியம்பதிவைகி வள
ர் தருந் திருநெல்லை யம்மையைக்காக்கவே. (உ)

வன்னிவிநாயகர்.

சூர்வளர்வேழமு கவனுற்றெழுப்பமர், துன்னுமநே
கவு சுரனைச்செறுத்திடு,--வார்வளர்பூதக ணபதிப்பெய
ர்த்தனி,வன்னிவிநாயக னடியைத்துதிக்குது,--மூர்வன
வாதிய புவனத்துயிர்த்தொகை, யொல்லுதயாநிறை யி
தயத்தளித்தரு,— ணீர்வளமேவிய கழனிப்பதித்திரு,
நெல்லையெனுவுனா மகவைப்புரக்கவே. (ங)

முருகக்கடவுள்.

சுமுகமுக்கடமன்னு கானத்தெறுழ்க்கரி,தொடர்
தரப்பயநண்ணு மேனற்கதிர்ப்புனத்,—தமுதெனக்கனி
சொல்லின் மானைப்புயத்தணை, யறுமுகத்தொருசெய்ய
சேயைத்துதிக்குது,--மிமிழ்திரைத்துகிறுன்னு பூமிப்பர

ப்பிடை, யியலுறப்பொலிபல்ல தேயக்*கரைப்புளே,—தமிழெனச்சுவையுள்ள தேனைப்பெருக்கிடு,சமிவனத்திருநெல்லை மாதைப்புரக்கவே. (௪)

நான்முகன். வேறு.

பாய்தருந்தெண்டிரைப் படலைமணியெறிதிருப் பாற்கடனனந்தலைவிராய்ப், படிந்தனந்தலையாற்று நீன்முகில்வயின்பூத்த பங்கயப்பூவுதித்தவ்,--வாய்தருந் தந்தை தனணைத்தலைமிசைத்தொக்க வாயிரஞ்சூட்டிற்குமேச, ரணிபெறுபுதுப்பூ முடித்துக்கைப்புனையுநா லருமறைக்குழவிகாக்க,— வாய்தருஞ்செங்கமல மாதும்வெண்புண்டரிக மாதுமிருகண்களாக,மாஞானமாது நுதல் விழியாவடைந்துதன் மலரடிபராவினுரைச்,— சேய்தருங்கல்விநிதி யுரமூன்றுருங்குறீஇச் சேரக்கடைக்கணித்துத், திகழ்வளம்பல்குசீர்க் கழனியம்பதியில்வாழ் திருநெல்லையம்மைதனையே. (௫)

தேவேந்திரன். வேறு.

புவனத்துயிர்த்தபசுக்குழுக்கள் பொறியின்வழியேயகம்புகுத்திப்,புரியுங்கொடியபவமனைத்தும் பொன்றக்

* கரைப்பு=பாஷை

கழுவிக்கடைக்கணிப்பான்,—பவனத்தவர்க்குங்கிடைப் பரிய பாகீரதியாகதியினொடு,பனிமால்வரையினிடையுதி த்துப் பழகுமழலைப்பசுங்கிளியை,—யவனித்தலக்கோர் திலதமென வணிமிக்கவிருங்கழனிாக,ரமருங்கருணைத் திருநெல்லை யம்மைதனையன்பொடுபுரக்க,--கவனத்துல வுங்கரியமழை காலும்வெள்ளைமுகிலினொடு,கழிகூர்வெ ள்ளைமழைகாலுங் கரியமுகிலூர்புத்தேளே. (சு)

திருமகள். வேறு

வெண்டிரைப்படலையெறி தருவெண்பெருங்கீர வேலையிலுதித்துமற்றை;மின்னெனத்தன்னை வேட்டான் மனைப்புக்கு மேவுதலிலாதுநீல,—மண்டெழிற்றவனைவரு வித்துக்கவுத்துவ மணிப்பரிசமீந்திருத்தி,மகிழொடுபு ணர்ந்துதன் விட்டில்வாழ்வுறுசெல்வ மாதடிமுடிப்பமு டிமே,—லண்டர்தங்காதலிய ராமரம்பையர்குழா மடிம லரிறைஞ்சவவர்த,மைம்பாவிருட்குநாய கனூடல்போ க்குவா னணியுமொண்மதியினுக்கும்,—வண்டுறக்குவி யாது தொண் டருளமாந்தட் மலர்ந்துதிகழ்பங்கயத்தா ண்,மரகதச்செல்வியைச் சமிவனத்திருநெல்லை மாதைப் புரக்கவென்றே. (எ)

கலைமகள்

தேன்பூத்தவெண்டா மரைப்பூத்துவெள்ளைத் திரு
ப்பாற்கடற்பூத்தமைச், சீமூதநல்லகட் டிற்பூத்தலர்ந்த
பூஞ் செந்தாமரைப்பூத்தவோர்,—வான்பூத்தவந்தணவ
ளுப்பூத்திருந்துநான் மறைமொழிகிளத்தியந்த, மான்
பூத்தபுகழெனத் திகழுமன்னத்தையெம் மாநததடத்தி
யைப்பா,—மீன்பூத்ததோற்றத்தி னகிலத்திடைப்பூத்து
மேவிநிறையான்மாக்களின்,மிடியுறுபசிப்பிணி யொடும்
பிறவிநோய்முற்றும் வீயக்கடைக்கணோக்கிக்,— கான்
பூத்தகாவினின் றிழிமதுநதிப்பெருங்கலுழிப்பெருக்கும
ல்குங், கழனிநகர்வாழ்நெல்லை யம்மையாம்பேரருட்
கடலினைக்காக்கவென்றே. (அ)

துர்க்கை. வேறு.

கரியகடமாமழைசுரக்குங் கனகதலத்தூர்வெண்ப
கடுங்,காலனிவர்ந்துநாடோறுங் கடவுங்கொடியகரும்ப
கடும்,—பரிவினெதிரிஞேக்குறினும் பதைத்துவெருவச்
செயுமசுரப்,பகடுகெவிழ்த்தேணரியேற்றிற் பாயுங்கன்னி
ப்பிணுகாக்க,—பெரியகனகச்சிலைசிலையாப் பிடித்தகரத்
தாற்றிருமணத்திற், பெம்மான்பிடித்தோர் சிலையேற்றப்
பெட்பாலனிச்சம்படினுமுரு,— தரிதின்மெலிமைபு

றுந் தன்மை யடையாதொளிர்சிற்றடிமெனடை, யன்ன
மதனைக்கழனிநக ரமர்ந்தநெல்லையம்மையையே. (௯)

சத்தமாதர். வேறு.

சிறைதழையெகினம தேறித்துரப்பவள்
சிகியெனுமழகிய வாகத்திருப்பவள்
சினமுறுமழவிடை வாவிச்சிறப்பவள்
திகழ்தருமூதகய மேவிக்களிப்பவள்
கறைகெழுபணியரி தாவிக்கதிர்ப்பவள்
கனல்பொழிவிழியரி யேறுற்றிருப்பவள்
கனிவுளமறுமய லூரத்திறத்தினள்
களைதருமிவரொழு வோரைத்துதிக்குதும்
மறைமுடிவினிடை மாடத்திருப்பத
மணிமுடியயனரி தேடத்தழற்பெரு
வரையெனவளரொரு சோதிக்கிடத்தினின்
மலியருளொடுகுளிரேறப்புணர்ச்சிசெய்
தறைதருமுலகுயி ரீனக்கருக்கொளூஉ
வருளியவனை யினைவானத்தலத்துறை
யமரர்கடொழவரமாடப்படிக்கண
மமர்சமிவனநெல்லை மாதைப்புரக்கவே (௧0)

## முப்பத்துமூவர்.

செழித்துள தமிழ்த்துறை வளர்த்திடுகுலக்குரிசில்
சீர்பெறுகையிற்கொற்ற வாளினையொளித்த*தே
திருத்தகுமிடத்தருள் பழுத்தொழுகுகட்பெரிய
தேவியுமைமெய்ப்பத்தி யாலனுதினத்துமே
தொழப்பிரியமுற்றவ ருளத்திடைவிருப்பினமர்
சோதிமருவெட்டத்தன் மாதவன்முதற்பலோர்
துதித்திடவவர்த்தெறு பகைக்குலமறுத்தருள்செய்
தூயவணமைப்பெற்ற தாயினுமினித்ததாய்
தழைத்தலர்பொழிற்பொழி மதுப்பொருதடத்துவளை
தாவிவயலிற்புக்கு வீசுதரளக்குவால்
சகத்தினைவிலக்கிடு மணிக்குலவரப்பினலை
சார்தரவொதுக்குற்ற நீள்பணைவளத்தினல்
வழுத்துறுபுகழ்க்குரிய நற்சமிவனத்துள்வளர்
மாதரசருட்சத்தி யாகியவொருத்தியை
மருத்துவர்வசுக்களொ டுருத்திரருக்கரொனும்
வானவரொர்முப்பத்து மூவர்கள்புரக்கவே.(கக)

காப்புப்பருவம் முற்றிற்று.

---

* தே=தேய்வம்,

## செங்கீரைப்பருவம்.

பூமேவுநான்முகன் ருதைசிரமேற்றீக்கை புரிஞான்றுபுவிமகவினுற்,பொலிகைவைத்தடிசூட்டு வித்ததன்றவனினும் பொற்பவம்மான்மனைவியாங்,-தாமேவுபுவிமாது தலைமிசைத்தன்கையந் தாமரைப்போதுவைத்துத்,தாண்மலரிலொன்றூன்றி மற்றொன்றைநீட்டிவெண் டண்கதிர்பரப்புதூய,— மாமேவுமதிமுக நிமிர்த்திருபுறந்தூங்குமணிபலகுயிற்றியிட்ட, வண்குழைகளின்சுடர்திகாந்ததிமிரந்தன்னை வாய்ப்பெய்தசைந்தாடநற்,- றேமேவுபொங்கர்சூழ் சமிவனப்பெண்ணரசி செங்கீரையாடியருளே, செல்லைநேர்தருவண்மை நெல்லைநாயகியம்மை செங்கீரையாடியருளே. (க)

வெண்மணிக்குலநிரை குயிற்றுபீடிகைமிசை விருப்புற்றிருத்திநறிய,வெண்கங்கையின்றெளிவு சான்றபுதுநீராட்டி வெண்படாத்தீரமாற்றி,— வெண்மதிக்குள்ளோர்சிறு வெண்மதிகிடந்தென்ன வெண்பொடிப்பொட்டுநுதலுண்,மேவவிட்டதனடுத் தூற்றசிறுகறையெனவிளங்கநீலத்திலதமு, --மண்மவிட்டுச்சூழி யக்கொண்டைகைபுனைந் தவிர்வெண்முத்தச்சுட்டிவேய்ந்,தணைத்தழுத்திட்டுமெடி மேல்வீழ்த்திவெண்சங்கி னூற்பால்புக

ட்டிமேனை,-தெண்மனத்தோகைகொள வளர்சமிவனத் தோகை செங்கீரையாடியருளே, செல்லைநேர்தருவண் மை நெல்லைநாயகியம்மை செங்கீரையாடியருளே. (உ)

விரிசடைக்காட்டிடை மிடைந்தமந்தாகினிதன் வெண்டிவலைகீழ்த்துளிப்ப, மிளிர்தருவலக்கைமுளரிக்கு மேலுளமுளரி வெம்பொறிகண்மேலிறைப்ப,—வரியகதிர்நிலவுமிழ் மதிப்பிறைக்குழவிதண் ணமுதவின்றுளியுகுப்ப, வணியெனவயங்குதுத்திப்பணக்கட்செவிக ளழலும்விடவுறைகடுவேத்,— துரியபரஞானவா னந்தநாடுறுமுமுட் சுக்கள்கண்டுள்ளத்தினிற்,சுகதுக்கமுந்தண் மை வெம்மையொடுமெண்ணோடு சொன்னமுஞ் சமமென்னவே,—தெரிவுறப்பெருமானை யம்பலத்தாட்டுமோன் செங்கீரையாடியருளே, செல்லைநேர்தருவண்மை நெல் லைநாயகியம்மை செங்கீரையாடியருளே. (ங)

சொல்லரியமாதவத் தவருநீங்கற்கரிய சூழ்வினைக் காடுபுக்குத்,தொடர்காமமாதிய கிராதர்கைப்பட்டுச் சுழன்றலைதராதெளியனை,— மல்லலங்கருணைக் கடற்படிந்திடவருள் வழங்குகிரிராசதனையை, மலமாயையிருள்கெடத் தண்கதிர்பரப்பியெழு மாமதிமுகத்தெம்மனை, —புல்லரியவசுரப் பகைப்பெருந்தீயினிற் பொன்ருது

விபுதருய்வான், பொருகின்றகடைமாரி யென்னவருண் மழைமாரிபொழிகொண்டலி ரவிதேர்தாய்ச்,-செல்லரிய வுபர்மதில் சுலாஞ்சமிவனத்தம்மை செங்கீரையாடியரு ளே, செல்லேோர் தருவண்மை நெல்லைநாயகியம்மை செங்கீரை யாடியருளே. (௪)

முருகுகமழ்கொன்றையுங் கங்கையுங்கவினுற மு டிக்குஞ்சடைப்பிஞ்ஞகன், முசத்தொளிர் தருங்கண்க ளாங்கதிருமதியுமுன் முதிர்கிரணவொளிகாலவும்,--பெ ருகுமெழில்குவியாது விரிகருணையமுதொடு பிறங்கியும் பொலிவடைந்தும், பெரிதுமகிழ்குவளையங் கண்களும் பங்கயப் பிரசமலர்முகமுமல்கிச்,--தருகின்றவளவில்பர மாநந்தவெள்ளந் ததும்பத்திளைத்தவன்பர், தனியுளம சைந்தாட வலகிலைந்தொழிலுந் தழைந்தாடவிண்டரு வினுந்,-திருவளர்பொழிற்குலவு தண்சமிவனத்தம்மை செங்கீரையாடியருளே, செல்லேோர்தருவண்மை நெல் லைநாயகியம்மை செங்கீரையாடியருளே. (௫)

வேறு.

பழவினையிருள்கெட வொளிவிடுதரளப் பணிதலை மிசையாடப்,பகுவாய்மகரமெனத்திகழ்நுதலணி பக லொளிகான்றாட,-நிழன்மணியிட்ட பதக்கமொளிர்ந்து நெருங்கியுரத்தாட, நின்மலமேனியி னுயகர்புண்ணிய

நீற்றொளிநிலவாடப்,--பழகியநீள்விழிபாய்குழைவள்ளை படர்க்தூசலினாடப், பரமர்திருக்கணளிக்குணவின்முக பதுமநிமிர்ந்தாட,—வடியருளங்குளிர் தந்திட மலைமக ளாடுகசெங்கீரை, யணிகிளர்சமிவன மழலைமறைக்கிளி யாடுகசெங்கீரை. (சு)

புண்டரிகத்தவனுதிபவைவர் புகழ்ந்தொருபுறமா டப்,புருகூதனுதிபவும்பர்கணங்கள் புனைந்தொருபுறமா டத்,--தொண்டர்கள்யோகியர்மாதவர்ஞானிகள் சூழ்ந் தொருபுறமாடச், சொலுமணிமாதிகள்வலநவநாதர்க டொக்கொருபுறமாடப்,—பண்டொளிவீசுபொன்மன் றிடைநின்று பதஞ்சலிபுலியாடப்,படர்சடைநிலவியகங் கையினோடமர் பனியிளமதியாட,—வண்டர்பிரானையு மாட்டியவம்மனை யாடுகசெங்கீரை, யணிவளர்சமிவன மழலைமறைக்கிளி யாடுகசெங்கீரை. (எ)

மூலம்வெளிப்படுமுக்குணநின்று முதிர்ந்துநிமிர்ந் தாட, மூவருமுத்தொழில்செய்திடவந்து முழங்கியுவந் தாடச்,—சாலவுமெய்த்தவருத்தமமோடுறு சத்துவநின் றாடத், தகவருகாமாதியரொடிராசத முங்களிதந்தாட, மாலுறுகின்றதமத்தொருகூறு வயங்குடலோடாட, ம ண்முதலைந்துபெரும்பூதங்களு மாகியொர்கூறாட,-வால

மர்கடவுளர்பா லுறையம்மனை யாடுகசெங்கீரை, அணிகி
ளர்சமிவன மழலைமறைக்கிளி யாடுகசெங்கீரை. (அ)

வேறு.

பண்மறையாகம மோதற்கரிய பசுந்தேனே
பத்திபழுத்த வுளத்தவர்பெற்ற பெரும்பேறே
வண்முகிலன்னவர் பின்வருகின்ற கரும்பேசூழ்
வானவராதிய சீவர்கள்வந்து தொழுந்தேவே
யுண்மையுமின்மையு மாகிநடித்தரு ளுந்தாயே
யுறுபவவிருள்கெட சுடர்விரிகதிரொழு மென்றூழே
தண்முகமதியொளி தழைதரவாடுக செங்கீரை
சமிவனமேவு பராபரையாடுக செங்கீரை. (கூ)

வேறு.

பம்பியதாரத் தரவெனவந்தே றுந்தீய
பந்தவஞானத் திடையுழல்கின்றோர் முன்சேரா
நம்பனுமாரப் புகழ்தரமுந்தோ துஞ்சேயை
நந்தனனென்னத் தருமெழினின்ற டுந்தோகை
* கும்பிடுமெந்தக் கரணமலர்த்த வெழுஞ்சோதி
குன்றணிமன்றத் திடைநடனம்புரி யுஞ்சீரார்
சம்புவிடத்தமர் நாயகிசெங்கோ செங்கீரை
சமிவனமேவிய மாமயில்செங்கோ செங்கீரை. (க0)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

---

* தம்பிடல்=தவிதல்.

## தாலப்பருவம்.

பொன்னஞ்சுணங்கு பூத்தொளிர்ந்து
பொறிவாய்ப்புல்ரும் புல்லைப்போற்
பூரித்திறுமாந் தறப்புடைத்துப்
பொய்யாமாயை போலுமிடைக்
கின்னல்புரியு நகிலமினு
ரிலகுமணிமா ளிகைமிசைநின்
றெறிகந் துகங்க ளோந்தருவி
னிடைப்புக்குகுக்கும் பூந்தேறன்
மன்ன ரணிதேர் மறுகனைத்து
மலிசேருக்கி யோடையொடு
வாவிநிமிரப் பெருக்கியயல்
வயலிற்சாலி வளர்க்கவளந்
துன்னுஞ்செல்வக் கழனிநகர்த்
தோகாய்தாலோ தாலேலோ
சுருதிமுடியி லுறைதருசிற்
சுகமேதாலோ தாலேலோ. (க)

தோற்றுமசர சரங்களெலாந்
தோன்றத்தன்பாற் காட்டும்விராட்

சுருபமெனவொண் சுதையொளியாற்
சுடர்மாமணிமே னிலைத்தளத்திற்
றேற்றத்தெளியா வூடலினாற்
றிகழ்மின்னனையார் கூந்தலணி
தெரியலொடுமுத் தலங்கல்களைஇச்
சிதறத்திகழுந் தெருக்கடெரு
ளாற்றலுடையா ருள்ளுணர்வா
லவலவிருள்சீத் தவிர்தலென
வருக்கனொளியில் லாப்போழ்து
மல்லையிரித்து விளங்குசெந்தேன்
ஆற்றும்பொழில்சூழ் கழனிநகர்த்
தோகாய்தாலோ தாலேலோ
சுருதிமுடியி லுறைதருசிற்
சுகமேதாலோ தாலேலோ. (உ)

வளங்கொள்வீணை விஞ்சையர்கள்
வான்புக்கொளிப்ப மழலைமொழி
வழங்குமடவார் விளையாடு
மணிச்செய்குன்ற மாகதத்தின்
விளங்குகதிர்சென் றைந்தருக்கண்
மிளிரக்கண்ட வரம்பையர்கள்

வெறும்பொய்யுடலைத் தானென்று
விழைந்துட்களிக்கு மறிவிலர்போ
விளங்கற்பகப்பூங் கொழுங்கொடியென்
றெய்திநோக்குற் றுணர்வுடையா
ரெதிரிற்சகம்போற் காணும
விதெனவியப்பென் றுளநாணித்
துளங்கத்திகழுங் கழனிநகர்த்
தோகாய்தாலோ தாலேலோ
சுருதிமுடியி லுறைதருசிற்
சுகமேதாலோ தாலேலோ. (ரு)

இறுதிக்குணத்தின் முற்றேன்று
மிருளுமீசன் ஞானியெனு
மிவணமறையா திவ்விருளவ்
விருவர்மானு மிருசுடரி
னெறியுமறைக்கு மெனவிருண்ட
நெடும்பூம்பொழிலின் பசுந்தேற
னிமிருங்கழைக்கா டறச்சாய்த்து
நிறையுமருதங் கடந்துசென்று
செறியுங்கடலி னுறப்பாய்ந்து
தீவங்கடந்து பாற்கடலிற்

றிருமாலுறங்குமரவணையுந்
திகைப்பனைக்கும்வளஞ்சான்று
துறுநற்செல்வக்கழனிநகர்த்
தோகாய்தாலோதாலேலோ
சுருதிமுடியிலுறைதருசிற்
சுகமேதாலோதாலேலோ. (ச)

அதிகாலையிற்புண்ணியதீர்த்த
மாடிப்பூதிகண்டிகையு
மணிந்துநுதற்கட்பெருமானை
யன்பிற்பணிவாரனுதினமும்
பதியப்பயிலுஞ்சைவநெறிப்
பத்திநெறியிற்பிறழாராய்ப்
பன்னூல்பயில்வார்பவங்கடப்பான்
பழமாமறையிற்பெருமொழியும்
விதிவாய்த்தருள்சற்குருமொழியும்
வினவிச்சிந்தித்துத்தெளிந்து
மேவுமகிலந்தாமாவார்
விளங்குஞானமடாலயநற்
றுதிசேர்ந்திலங்குங்கழனிநகர்த்
தோகாய்தாலோதாலேலோ

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE - 436846)

சுருதிமுடியிலுறைதருசிற்
சுகமேதாலோதாலேலேலோ. (ரு)

வேறு.

அறுதொழிலாளர்க ளருமறையோதுவர் வாழ்வாரோர்சாரே, யணிகிளர்மன்னவ ரடுதொழில்பயில்பவர் சூழ்வாரோர்சாரே,— பெறுபலபண்டமு மாறுநர்வாணிபர் சேர்வாரோர்சாரே, பெருகியமூவர்க ளேவினபுரிபவர் நேர்வாரோர்சாரே,— பொறிவழிவிலகினர் புண்ணியநூல்வழி தேர்வாரோர்சாரே, புவனமெலாமக மாம்பரிபூரணர் சார்வாரோர்சாரே,— தறுகவிலாதமர் சமிவனநாயகி தாலோதாலேலேலோ, சனனவிடாயற வருள்பலதாயகி தாலோதாலேலேலோ. (சூ)

ஆரணமாமுடிநேர்பொரு டோர்ந்துப சாந்தத்தமர்பவர்பா, லகமொடுதார்க்கிகர் நேர்ந்துபல்வாத மடுக்கிமுழக்கலென,— நேருறுமாமயி லன்னவர்நீர்குடைநீண்மலரோடைதொறு, நிமிர்தருமேதிகள் போந்துகலக்கிட நெடியசரோருகமேற்,— சாருமனப்பெடையூடலொழிந்துற தன்காதற்சேவ, றன்னெடுகூடுதல் காளையர்நோக்கித் தமதுநலார்க்குரையாச்,— சாரமகிழ்ந்துறு சமிவனநாயகி தாலோதாலேலேலோ, சனனவிடாயற வருள்பலதாயகி தாலோதரலேலேலோ. (எ)

மருமலர்வெண்டா மரையுறைமாமறை வாணன்
ருலுவுறை, வாணியுமாகி யராவணைமீதுறை மான்மரு
மத்தமருந்,— திருமகளாகியு மன்றுசுராசுரர் சிந்துக
டைந்திடுநாட், சீறிடுமாலம துண்டிமையோருயிர் சே
ரவளித்தபிரா,— னொருபுறமார்தரு முமையவளாகியு
முற்றொருமுத்தொழிலு, மோவறவாற்றிடு முத்தமியா
கமி யொளிதிகழ்தோரணம்வேய்,— தருமறுகோர்பெ
று சமிவனநாயகி தாலோதாலேலோ, சனனவிடாயற
வருள்பலதாயகி தாலோதாலேலோ. (அ)

அதிசிற்பரசுக வடிவிற்றிகழ்பவ டாலோதாலே
லோ, வமைவுற்றுளநினை வினைநட்புறுபவ டாலோதா
லேலோ,— விதனப்படவரு வினைதீர்த்தருள்பவ டா
லோதாலேலோ, மேவிக்கொளவரு மமுதக்குதலைய
டாலோதாலேலோ,— பதமெத்தனையுள வவைமேற்
பொலிபவ டாலோதாலேலோ, பழமைப்பரமவ னச்
சுருபத்தின டாலோதாலேலோ,— சதமுற்றருள்சமி
வனமெய்ப்பொருளுமை தாலோதாலேலோ, தமியற்க
ருள்புரி கருணைக்கடலமை தாலோதாலேலோ. (க)

வேறு.

ஆரணிநாடுறு காரணிதாலோதாலேலோ, வாரருள்வா
ரிதி சேர்கணிதாலோதாலேலோ,--பூரணிபாத சரோரு

கிதாலோ தாலேலேலோ, பூதரநாயக பாலகிதாலோ தா லேலேலோ,—வாரணிஞானபயோதரிதாலோதாலேலேலோ, வாழ்வருண்மோன தயாபரிதாலோதாலேலேலோ,—தார ணிசாதன சாதகிதாலோதாலேலேலோ, சால்புறுசமிவ ன நாயகிதாலோதாலேலேலோ. (க௦)

தாலப்பருவம் முற்றிற்று.

## சப்பாணிப்பருவம்.

பொருகடற்புவியினிற் பூரியர்களாயினும்
 புண்ணியமு ளுற்றியுளரோற்
போந்தவர்களித்திடப் பல்விதப்பொருளினொடு
 போகமு மளித்துமன்னுந்
திருமகடனடியிற் றுவைப்பவிதழ்மெல்கியுஞ்
 செம்பஞ்சி னிற்சிவந்துஞ்
செயற்கைமணமேபெற்ற முளரியிதுவோநமைச்
 சிவணுவ தெனுச்சினந்து
பெரிதுங்கித்துமற் றருமையினணைத்திடும்
 பிரியக்கு ழந்தையோங்கும்
பிறங்கற்புயத்திலணி தெரியலெனவுறுதலாற்
 பிறழ்காந்த ணிகர்கைமலராற்

றருமருவுகோயிலூர்த் திருநெல்லையம்மையே
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (க)

அளவில்பலகலைநூ லுணர்ந்திடினுமரியதா
மத்துவித வுண்மையுணரி
னன்றிமறையந்தம் பகர்ந்தவுபசாந்தபத
மடைதலரி தாகுமதுபோல்
வளைகடற்புவியிலுள தெய்வமெல்லாமபய
வரதமாக் கைகாட்டினும்
வழங்குமிகுகாமியப் பயனுதவலன்றிநின்
மலர்க்கரங் களெனவடியா
ருளமகிழ்தரப்பழய வினையொழிந்துறுசனன
மோட்டிமுக் காலங்கடந்
தொழிவறுசுகாதீத வாழ்வையுதவுங்கொலென
வோதிமறை நான்குமேத்துந்
தளிரனையசெங்கைகொடு திருநெல்லையம்மையே
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (உ)

கூறுசாதனமன்றி யொன்றினைச்சாதித்தல்
கூடாமை தேர்ந்துளத்திற்
குறிப்புற்றுநாற்சா தனங்களையுநன்குகைக்
கொடுகடைத் தேறுமவர்போ
லேறுடைப்பெருமா னினும்வெகுளினென்செய்வ
தென்றஞ்சி முனமோர்தலை
யிழந்தவமதிப்புண்ட நான்முகத்தொருவனின்
னீரிரு கரந்துதிக்கின்
மாறுதறவிர்ந்துநந் தலைகளுய்ந்திடுமென்ன
வாணியொடு வீணைகூட்டி
மறைகொடுபராவுநீள் புகழ்பெற்றுநிகரற்ற
வளவிய மலர்க்கைகொண்டு
சாறுவளர்கோயிலூர்த் திருநெல்லையம்மையே
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (ங)

கார்மருவுகச்சணி வனாக்கொங்கைகவினுறூங்
கடலாடை புனைமருங்குற்
காசினிக்கணிகையுள மகிழ்தரவளித்திடுங்
காமவின் பங்கண்முற்று

நேருறுவிரோதமிவை மாயாவிகாரமென
நீக்கிநிச் சலவறிவின
னினைவரியசச்சிதா நந்தமயமாயமரு
நிட்டையக லாதசான்றோர்
சீர்பரவுநின்னருள் வெளிக்குணீயருண்மதித்
தெள்ளமுத முணவிழைதல்போற்
செறிசகோரங்களெதிர் கொளுமாறுகிரணமெறி
திங்கண்முக மாயிகுழலிற்
றூர்மருவுசமிவனத் திருநெல்லையம்மையே
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (௪)

உண்மையறிவாநந்த வொளியன்றிநினைவா
லுதித்த சீவேசுரசகத்
துள்ளபடியுளதன் றெனத்தேர்ந்துபற்றற்ற
வுயர்குரவ னெனுமிரவிமுன்
றிண்மையுறுசீடன் முகங்களித்தொண்கணீர்
சிதறலென வம்புயங்வ
டிகழ்முகமலர்ந்துகண் ணீர்சொரியவங்கவன்
றீவினை யெனச்செறிதருங்

கண்மையுறுகுவளைகண் முகங்கருகவிண்ணினெழு
கதிரவன் றேர்ப்புரவிபோங்
கதியினைமறைத்தெழும் பூம்பொழிலின்மாங்குயில்கள்
கண்டுசெந் தளிரெனவவாந்
தண்மையுறுமெல்விரற் செங்கைகொடு திருநெல்லை
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (ரு)

பார்மிசைச்சமயமோ ராறினுளுமவரவர்
பராவவளர் நாமரூபப்
பண்பினுக்கேற்றவித மேதோன்றிவேட்கையின்
படிவரம் பலவுநல்குஞ்
சீர்பெறுந்தெய்வநா மலதுவேறிலையெனத்
தெளிதரவொ ராறுமுகமுந்
தெள்ளித்தெரிக்குந் திருக்கோலமுங்கொண்ட
சிறுசேயை மடியின்மீது
சேர்தரவணைத்தருமை யினினமுதமூட்டித்
திகழ்ந்துகவி னெழுகவொளிருஞ்
செவ்விக்கபோலத்தி லள்ளிமுத்தங்கொளுஞ்
செந்தளிர் விரற்கைகொண்டு

தார்வளர்கருங்குழற் றிருநெல்லையம்மையே
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (சா)

வன்னிநாயகியரசர் சென்னிநாயகியகில 1888
மன்னுயி ரனைத்துமீன்ற Q25:4173
மாதுநாயகிமறைக ளோதுநாயகிநெடிய
மலையனாயி னன்றுபெற்ற
கன்னிநாயகிசெய்ய கமலநாயகிபல்ல
கலைகணா யகியிருவராங்
கண்கணாயகிபரிய பெண்கணாயகியருட்
கடலினா யகியுருவமா
மின்னினாயகிபெருகு பொன்னினாயகிசுத்த
விமலநா யகியென்னுளே
மிளிருநாயகியெங்கு மொளிருநாயகிசெல்வ
மேவிய திருக்கோயிலூர்
தன்னினாயகியெங்க ணெல்லைநாயகியம்மை
சப்பாணி கொட்டியருளே
சாந்தமுறுமன்பரு ளெழுந்தருள்பரஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே. (எ)

வேறு.

மேலொடுகீழுறு சனனமுமரணமு
மேவிடு காரணமால்
மேவுமஞானம தாமதுதோன்றி
விளிந்திடு மென்றுதெரித்
தாலெனமுன்பொரு வழுதியினன்புல
கறியச் செயல்கருதி
யவன்முனமாயப் புலியைவிடுத்து
மறைத்தய னின்றபிரான்
சாலவுமகிழ விலங்கையர்கோன்வே
தண்ட மெடுத்திடுநா
டவிருமூட லொழிந்துவிரைந்துமெய்
தழுவிய செங்கைகொடு
கோலமெனுவரு நாரணசோதரி
கொட்டுக சப்பாணி
கோபுரமணிதிகழ் சமிவனநாயகி
கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

நாரணிசூலினி நாதரிடத்தமர் பொற்பாவை
நாகதலத்தவர் மாகதலத்தவ ரெப்போதும்
வாரணியாமளை மாலினிதாருக னைச்சீறு
மாதரிபயிரவி மலைமகளாயி யுமாதேவி

யாரணிமுக்கணி யாதிபுராதனி கங்காளி
யமலைபராபரை யருள்புரிவாயென வுற்றேருதுங்
காரணியாய மனோன்மணிகொட்டுக சப்பாணி
கழனிநகர்க்கணை மம்மனைகொட்டுக சப்பாணி. ()

மறைமுடியதனி னடித்தருளுத்தமி கற்றோர்தம்
மனமெனுமுளரி களிப்பமலர்த்து கதிர்ச்சோதி
பிறைவளர்சடையின் முடித்தவர்மெய்க்கணிடப்பாலே
பெருகியகருணை யுருக்கொடிருக்கு மெழிற்பாவை[க்
கறைகெழுவினையிரு ளுக்கொர்விளக்கொளி யுற்றேரை
கதிபெறவருள்செய் கடைக்கணிமெய்த்தவர்புத்தேளிர்
நிறைதருசமிவன முற்றவள்கொட்டுக சப்பாணி
நெல்லையமைப்பெயர் பெற்றவள்கொட்டுக சப்பாணி.

சப்பாணிப்பருவ முற்றிற்று.

## முத்தப்பருவம்.

ஒழுகுசெறுநீர்க்குடவளைக ளுயிர்க்குமணியுந் தி ரைகொழித்திட், டொதுக்கும்வரம்பிற் கழைக்குலங்க ளுதிர்க்குமணியுநிலவெறிப்பச்,— செழியநறவார் செங்குமுதந் தினமுமலர்ந்து மலர்ந்துமுன்றன், செவ்வா

யொவ்வா மையிற்கண்ணீர்த் திவலைசொரிந்து முகங் கருகி,— யழிதனைக்கியதனையுன தமுதமொழுகு பசுங்குதலை, யன்பிற்கேட்பவிரும்பிமின்பா லணுகுஞ் சோலைப்பைங்கிளிகண்,— மொழியக்கேட்டு நகைகொளும் வாய்முத்தந்தருக முத்தமே, மும்மையுலகுந் தருநெல்லை முதல்வி முத்தந்தருகவே. (க)

தாவாமனத்தின் விருத்திபல
தடித்துப்பவஞ்ச மாயமெனச்
சவிதாவிரதப் பரிமிதிப்பத்
தகருந்தெங்கின் பழஞ்சிதறிப்
பூவாவருக்கைக் கனிவீழ்த்திப்
பொலியுமரம்பைக் குலைசாய்ப்பப்
பொழிலிற்பொழியும் பூந்தேறல்
பொங்கித்தேனா றெனப்பெருகு
மோவாவளஞ்சேர் சமிவனத்தி
னொருநம்பெருமா னெனுங்கருணை
யுலவாக்கடலி னிடந்தோன்றி
யொளிருமுகமா மதியமுத
மூவாதொழுகுங் குமுதவாய்
முத்தந்தருக முத்தமே

மும்மையுலகுந் தருநெல்லை
முதல்விமுத்தந் தருகவே. (உ)

அழியுமுலகம் பொய்யெனக்கண்
டகிலந்தானு யபரோட்ச
வறிவுசாட்சாத் காரமதா
யகண்டபரிபூ ரணமாகிப்
பொழியுங்கருணை வடிவெனக்கொள்
புனிதகுருவாம் பரிதிமுனம்
பொன்றலுறுமஞ் ஞானமெனப்
பொருந்தக்காட்டு முறைபோலச்
செழியன்மகளா யெழுந்தருணின்
றிகழுமூன்று முலைமறையத்
திருநோக்கருளுந் திருவருளார்
தெய்வப்பெருமான் செவிகுளிர
மொழிகளரும்பு மெழின்மலர்வாய்
முத்தந்தருக முத்தமே
மும்மையுலகுந் தருநெல்லை
முதல்விமுத்தந் தருகவே. (ங)

பற்றற்றெல்லா வாதனையும்
பரிவற்றேரேழ் பூமிகளாம்

படியுங்கடந்த முத்தர்களே
பரமாநந்த மெய்ப்பொருளை
யுற்றுக்காண்பா ரெனக்காட்ட
லொப்பவோரேழ் திசைகளையு
மொருங்கேவென்று கடந்தபின்ன
ருதயமான தலைவனைக்கண்
டற்றமிதுவென் றுலகமெலா
மளித்துத் தனதுமுடிசூட்டு
மரியமணியே யெனமேனை
யள்ளிமுத்தங் கொள்ளுமெழின்
முற்றுங்குமுத மலர்வாயின்
முத்தந்தருக முத்தமே
மும்மையுலகுந் தருநெல்லை
முதல்விமுத்தந் தருகவே. (௬)

சதிசெய்பொறியைக் கரணத்தைத்
தானென்றுழலும் பெருமறவி
தன்னுற்றணந்த மெய்ஞ்ஞானந்
தனைக்காணுமற் றளர்வுறுமத்
ததியிலொருசற் குருவறியுந்
தன்மைகாட்டக் கண்டுசுகோ

ததியின்மூழ்கி யின்புறுவோன்
றன்னைநிகர வொருமாறன்
மதியற்றுறங்கு வேளையிற்கை
வாள்கொண்டொளித்துப் பின்னையொற்றர்
வந்துகூற வதனோடு
மருவுங்குறியுங் கண்டுமகிழ்
முதிரவருள்வோன் பெருவாழ்வே
முத்தந்தருக முத்தமே
மும்மையுலகுந் தருநெல்லை
முதல்விமுத்தந் தருகவே. (௫)

வேறு.

பாமேவுவேதப் பழம்பொருளுணர்ந்துசெம்
பதுமபீடத் தொருத்தி
பதியுமருமத்தினெடு மாலவன்வேதன்
பதங்களு நசிப்பவென்றே
தாமேவுமியமாதி யோகமுற்றுலகெலாந்
தமையலது வேறுகாணச்
சச்சிதாநந்தவடி வாகியவருள்ளமலர்
தழையவரு மிறைவர்முடிமேன்

மாமேவுபிறையைத் துதிக்கையினெடுத்துநின்
வாணுதலி னொடுசேர்த்துவிண்
வயங்குமுழுமதியொப்பு நோக்குமுற்றேன்றலை
மகிழ்ந்துமுத் தங்கொள்குமுதப்
பூமேவுமிளநகைப் புனிதமாமயிலமுது
பொழியும்வாய் முத்தமருளே
பொழில்வளஞ்சூழ்தரு மணிச்சமிவனத்துள்வளர்
பூவைவாய் முத்தமருளே. (சூ)

முன்பூத்திலங்கிய சராசரமனைத்துமாய்
முடிவில்பர மாநந்தமாய்
முற்றுமுளதாகியில தாகியொளிர்கின்றவொரு
முதல்வி மூவருண்முதல்வனு
மின்பூத்தகொன்றையு மெருக்கும்பசும்புல்லும்
வெண்டிரை பொருங்கங்கையும்
வேய்சடாடவிநுதற் கட்கறைமிடற்றுதி
வேதிய னிடத்தமர்ந்த
கொன்பூத்ததிருமேனி யெனுமெழிற்கடலிடைக்
குளிர்தரப் பூத்தமுகமாங்
கோமளக்கமலமலர் நாப்பட்குலாவுமிரு
குவளையொடு நண்புபூண்டு

பொன்பூத்தலர்ந்தினிய குதலைமதுவார்தரும்
பூங்குமுத முத்தமருளே
பொழில்வளஞ்சூழ்தரு மணிச்சமிவனத்துவளர்
பூவைவாய் முத்தமருளே. (௭)

வேறு.

மடுவிலலைக ளலர்கள்பல்க
மன்னுசமி வனத்தவள்
மரகதநிக ரழகுபுல்லும்
வண்ணவடி வுடைக்குயில்
நெடியமறைக ளுருகியுள்கு
நின்மலசொரு பத்தவர்
நினைவினுதய தருணவல்லி
நெய்யளவு குழற்பெடை
கடிகொள்கமல மருவுசெல்வி
கண்ணுகலையி னுத்தமி
கருதுதுதியின் மகிழ்வுமல்கு
கன்னிமறுவில் முத்தியை
யடியர்வினைக ளொழியநல்கு
மன்னைதருக முத்தமே

யளவில்கருணை வளருநெல்லை
யம்மைதருக முத்தமே. (அ)

முந்துசனன சலதியூடு
மூழ்கிடாம லெம்மையம்
முத்தியாங் கரைக்கணேற்று
முதல்வி ஞானமற்றவர்
சிந்தைமருவ விச்சையாய
திமிரபானு புத்தியிற்
றினமுநினையு மடியருளமு
தித்துமேவு முத்தமி
எந்தமுடலு நிதியுமுயிரும்
யாவுமாய நந்தமா
மிருக்கெலாந் துதிக்குமெந்தை
யிடதுபாக முற்றவள்
அந்தமிலகு சமிவனத்தெ
மம்மைதருக முத்தமே
யளவில்கருணை வளருநெல்லை
யம்மைதருக முத்தமே. (கூ)

வேறு.

மேகமேனியனரிய வேதமோதியமுனிவன் மெய்க்கணே, மேவுவாசவன்விபுத ராதியோர்தொழவருள்

கடைக்கணுய்,—மோகமாயாடவியி னூடுபோகாதவர்கள் சித்தமேன், மோதுசீராரமுத வாரிநோாகவருள் கொட்டுவாய்,— பூகமார்சோலைவளர் கோயிலூர்வாழ்தரு மடத்துளார், போதகாசாரியர் சுவாநுபூதித்தலைவர் வைப்பதா,— யேகநாயகன்மருவு பாகமாருமையருள்க முத்தமே, யெல்லைகாணரிய புகழ் நெல்லைநாயகியருள்க முத்தமே. (௧0)

முத்தப்பருவம் முற்றிற்று.

## வருகைப்பருவம்.

சீர்பூத்தகண்ணுதற் பெருமானையெண்ணுத
    சிறுவிதி மகத்திலுற்ற
செங்கதிர்கள்பன்னிருவ ருங்குழீஇயவியுணவு
    செய்பிழையொ ழித்தல்வேண்டிப்
பேர்பூத்தசரணென்ற டைந்துகுறைமுறையிடும்
    பெற்றியென முற்று *குருவிற்
பிறங்குசெம்மணிபல குயிற்றியொளிர்பேரழகு
    பெருகுநூ புரமொலிப்பத்

* குருவில்=நிறத்தினல்.

தார்பூத்தபொன்னடி பெயர்த்துவிரிபூமிதி
தரப்பயப் பையவைத்துத்
தத்துவமுணர்ந்தமெய் த்தவமுனிவரடியருப
சாந்தவித யங்களிப்ப
நீர்பூத்தகமலவன் னங்கள்மகிழ்வொடுதொடர
நேர்ந்துமலை மகள்வருகவே
நேமிநாயகனுமபி ராமிநாயகனுமகிழ்
நெல்லைநா யகிவருகவே. (௯)

மருவியகடாதிகா ரியமெவற்றிற்குமொரு
மண்முதற் காரணமதாம்
மன்னுமரவாதியா ரோபத்தினுக்கொளி
வயங்காத கயிறுதியாங்
கருதவருசிவேசு வரசகத்திற்காதி
காரணம் பிரமமாகுங்
*காட்டிவையெனப்பூத வொலியெவற்றிற்குமிது
காரணமெனு நூபுரந்
தெருளுறவொலிப்பவடி யாரிதயபங்கயஞ்
செறிகின்ற தளிரனையசெஞ்

*காட்டிவையென=உதாரணமாகிய விவற்றைப்போல.

சிறடிபெயர்த்தேழை யேனுளங்குளிரவருள்
சிந்திய கடைக்கண்மிளிர
திருமலசுகோதய புராதனிபராபரையெ
னிகரிலிரு நிதிவருகவே
நேமிநாயகனுமபி ராமிநாயகனுமகிழ்
நெல்லைநா யகிவருகவே. (௨)

ஈசனதுமுத்தொழிற் கிறைவர்பலசிவர்க
ளியங்கு கரணம்பொறிபுல
னிவைகடோன்றற்குறு முதற்காரணங்களென்
றிடுமுக் குணங்களின்பாற் [ப்
பேசுமொளிதிகழ்வெண்மை செம்மைகருமையென
பிறங்குமுந் நிறமுமெய்திப்
பேரருளின்வெள்ளந் ததும்பவெங்கெங்கும்
பெருக்குந் திருக்கணோக்கி
மாசறுமதுப்பிரிய மாதவற்கருள்கொற்ற
வாளீச னுளமலர்த்தி
வயங்குநின்பூரண சுதாகரமுகத்துண்மலர்
வாயமு துவட்டெடுப்ப
நேசமொடுசுதன்மையுத வின்னமுதமுண்டருளு
நிறைகருணை நிதிவருகவே

நேமிநாயகனுமபி ராமிநாயகனுமகிழ்
நெல்லைநா யகிவருகவே. (௩)

சேணுயர்நெடுங்கோட்டு வரைபலவுளும்பெரிய
செம்பொன்மே ருவுநாணுறத்
திகழ்தர்துபுடைபரந் திருமாந்துவளர்குயச்
சேய்மலர்க் கொடியொர்பாலும்
வீணையொடுவேதன்மறை வாயமுதமுண்டுறையும்
வெண்மலர்க் கொடியொர்பாலு
மேவியிருகைக்கமல மேலிவிருகைக்கமல
மெல்லெனத் தாங்கநடுவண்
வாணுதலினழகொழுகு வேர்முத்தரும்பமன
மகிழன்பர் வேண்டுவவெலாம்
வரையாதளித்துமல ரடிபெயர்த்தெதிர்வரு
மணங்கமழ் பெருங்*கற்பமாய்
நீணிலத்துயிரெலாங் கருவுறுதீன்றவொரு
நின்மலத் தாய்வருகவே
நேமிநாயகனுமபி ராமிநாயகனுமகிழ்
நெல்லைநா யகிவருகவே. (௪)

---

* கற்பம் = கற்பகதரு.

பூதிசாதனநெறி படைத்துரியபத்திநெறி
பூண்டுதிரு நீலகண்டர்
பொன்னடிக்ககலாத மெய்த்தொண்டுபுரிகின்ற
புண்ணியர்க் கேசொந்தமாய்
நூதனவிவேகியுள நுழைபாதவேதாந்த
நுண்பொரு ளுணர்ந்தசீலர்
நுவலரியவான்ம நிட்டாபரரெனத்தக்க
னோன்மையர்த மிதயமென்னுஞ்
சீதவாரிசமலர வெழுமருணகிரணவொளி
திகழிளம் பரிதியெனவாழ்
செல்வமணியுலகெலா மீன்றமணியடியனேன்
சிந்தையக லாநன்மணி
நீதிவளர்சமிவனத் துண்மணிதடம்பணையு
ணிலவுபெண் மணிவருகவே
நேமிநாயகனுமபி ராமிநாயகனுமகிழ்
நெல்லைநா யகிவருகவே. (ரு)

வேறு.

குலவுமுலகிலைந் திணையுட் குறிஞ்சிக்கதிபனங்குமரன், கொடியபாலைக்கிழத்தியுநங் கூருந்தலைவிகொழுமுல்லை,—யுலவுதலைவனம்முன்னோ னுலவாநெய்தற்பரதவர்க, ளுவக்குந்தலைவனம்மிறைவ னுந்தமுறையாற்

றகுநமக்கென்,—திலகுமருதப்பணைகாத்தற் கியைந்து
சுதன்மைமகள்போன்றங்,கெழிற்சேடியர்களுடன்கூடி
யிலங்குமோர்மாமரநிழலி,— லலகில்கருணையோடிருந்
த வன்னம்வருகவருகவே,யழகுமலியுந் திருநெல்லை யம்
மேவருகவருகவே. (கூ)

*ஒளியிலுணர்வாற் றனின்வேறின்
றுலகமெனநூல் கற்றிருந்தோ
னுற்றவனுபூ தியிற்காணு
துவக்குமுறைபோன் மேனிலத்திற்
களிகொள்புனல்கான் மதிக்காந்தக்
கடத்துட்டோன்றுந் தம்முகத்தைக்
கண்டுமடவார் சாளரத்திற்
கரந்துநமது முகத்தழகை
யெழிதிற்கவர்ந் தகள்ளமதி
யீதுவென்றெண்ணி மலர்க்கரங்க
ளிணக்கிநெரித்துள் ளகப்பட்ட
தென்றுழியக்கு மாளிகைசூ
ழளிகொள்வளஞ்சால் சமிவனத்து
ளன்னம் வருகவருகவே

* ஒளி இல் உணர்வு=விளக்கமில்லாவறிவு.

யழகுமலியுந் திருநெல்லை
யம்மே வருகவருகவே. (எ)

உள்ளக்களிப்பிற் ருய்முலைநின்
ருெழுக்குதீம்பால் வெள்ளமென
வுயர்வானெடுங்கோட் டெழின்மலையத்
தூற்றுமமுத வெள்ளருவி
வெள்ளப்பெருக்கு மிமயமெனும்
வெற்பின்முடிநின் றிழிந்துவரு
விண்ணினதியுந் தடங்கடலும்
வெருவப்பிறவிக் கடல்கடப்போ
ரொள்ளற்கரிய துக்கநிவர்த்
தியினிற்ருேன்று மிலக்கற்ற
வின்பவெள்ள மெனப்பெருகு
மெழிலார்பெரிய மதுநதிபா
யள்ளற்பழனச் சமிவனத்து
ளரசேவருக வருகவே
யழகுமலியுந் திருநெல்லை
யம்மே வருகவருகவே. (அ)

முன்னைப்பெரிய தவத்தின்மறை
முடிவிற்பொருள்கண் முழுதுணர்ந்தோர்

முற்றுஞானப் பயிர்வளர்ப்பான்
முதிர்காமாதிக் களைகட்ட
லென்னப்பழனத் துழத்தியர்க
ளெதிரிற்கைகால் கண்முகம்போன்
றிருக்குமெனினு மக்களைகட்
டினிதிறேும்ப ப்பைங்கூழ்கள்
பன்னப்போத மேலோங்கிப்
பழியிலழியாப் பேரின்பப்
பயனேவிளைக்கும் பான்மையெனப்
பலத்தகதிரின் பணைகாத்த
வன்னப்பெடையே சமிவனத்து
ளரசே வருகவருகவே
யழகுமலியுந் திருநெல்லை
யம்மே வருகவருகவே. (கூ)

தீராவெழுமைப் பவக்கடலைத்
தீரக்கடத்தும் புணைவருக
சிறியேன்மனத்துன் பறவழியாச்
செல்வமளிக்குந் துணைவருக
பேராரகில சராசரங்கள்
பிறங்கக்காக்கு மணிவருக

பெருகுமமுதப் பிறைமுடித்த
    பெம்மானொருபா லுமைவருக
நீரார்களினப் பூவையர்க
    ணிலவுமிருபாற் குயில்வருக
நிறையுங்கருணை யாலடியார்
    நினைவினடிக்கு மயில்வருக
வாராவமுதாஞ் சமிவனத்து
    ளன்னம்மவருகவருகவே
யழகுமலியுந் திருநெல்லை
    யம்மே வருகவருகவே. (கo)

வருகைப்பருவம் முற்றிற்று.

---

## அம்புலிப்பருவம்.

சாமம்.

வார்கடற்புவியிற் றனைப்பெற்றளித்தவிம
    வான்பெயர்ச் சார்பெண்ணியோ
மன்னுதண்மதியென் றிசைப்பதுகுறித்தோதன்
    மகனைநின் மனைவியறுவ

ரேர்பெறப்பா லூட்டு தாயெனவளர்த்ததனை
யெண்ணியோ கண்ணுதலெனும்
மிறைவரதுகண்ணெனத் தனதுபாதியிலுளா
யென்றுணர்ந்தோ நினக்குச்
சீர்பெறற்குரியசுற் காலம்பிறந்ததோ
தேறுகில மெம்பிராட்டி
தெருவில்விளையாடுதற் குனையுமொருபொருளெனச்
சிந்தித் தழைக்கின்றன
ளார்கிடைத்தாலுமிவ ணேர்கிடைப்பரிதிவளோ
டம்புலீ யாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியொ
டம்புலீ யாடவாவே. (க)

தானம்.

முன்னைவினையாலுற்ற நின்னுட்களங்கமறு
முதிர்தந்து கலைநிரம்பு
முற்றவுஞ்சனனமர ணப்பிணிதொலைந்தழியு
மொய்சுடர்ப் பரிதிமுன்ன
முன்னெளிமழுங்காம லுபசாந்தமுடிபெற்
றுவந்துவாழ்ந் திடலாகுமே

னுறுதிபலவேண்டினும் பெறுதியரிதிலையிவட்
குன்னிடத் தருளுண்டெனிற்
பன்னககணங்களுக் கிறையெனப்பகர்தரும்
பணிராச னிவள்கைவிரற்
பதியுமோராழியாம் பணியாயிலங்கும்
பகைப்பணியு நினையென்செயு
மன்னையுலகுக்கெலா மகள்சுதன்மைக்கிவளொ
டம்புலீ யாடவாவே
யருமுல்லைநோர்நகைத் திருநெல்லைநாயகியொ
டம்புலீ யாடவாவே. (உ)

சாதனசதுட்டய மடைந்துபக்குவராய்த்
தனித்துறு மகாவாக்கியந்
தாங்கேட்டறெளிதல்சிந் தித்தலென்றிவைகளாற்
சாதித்துணர்ந்த வுணர்வாற்
பேதமறவுலகெலாந் தாமாம்விபூதியர்
பெறற்கென்று மழிவிலாத
பேரின்பமருளுமிவள் வள்ளன்மைகண்டிலாய்
பெருமைசால் சமிவனத்திற்
பாதகக்கொடுவினையுநீக்குமதுவாவியுட்
பத்தியொடுமூழ்கியோர்காற்

பராவிடினின்மெய்க்களங் கோடுகுறைநோயும்
பறந்துவிடு மிதுசரதமா
மாதலாலெங்களகி லாண்டநாயகியுட
னம்புலீ யாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியோ
டம்புலீ யாடவாவே. (ரு)

மால்பூத்தமாதவன் கமலாதனத்தனொடு
வாசவன் முதற்றேவரும்
வந்தடிபணிந்துதங் குறைகூறிவேண்டிய
வரங்களும் பெற்றுமகிழப்
பால்பூத்ததிருமேனி யார்கொற்றவாளீசர்
பங்கிலுறை யெங்கடலைவி
பார்த்தருள்பொழிந்திடுஞ் சந்நிதியினீயும்
பரிந்தவர்க ளொடுநறுமணங்
கால்பூத்தமலர்கொண் டிறைஞ்சிநினையகலாத
கயரோகமுங் குரவராற்
கழறிட்டசாபமு மறத்தொலைத்தென்றுங்
களிப்புறாஉஞ் சமயமிதுவே
யால்பூத்தவுந்தியிற் பார்பூத்தசெல்வியுட
னம்புலீ யாடவாவே

பருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியொ
டம்புலீ யாடவாவே. (ச)

பேதம்.

தனிவளருநின்கலைக ளீரொட்டதற்குமொரு
சற்றுநிலையில்லைபின்னுந்
தாக்குவதுபறவிரு ளிரக்கமில்லாமலொரு
சமயத்தின் மெல்லியனாயும்
பிணிவளர்தரப்புரிவை யாதலாற்சாந்தமுறு
பெற்றியுநினக் கில்லையெம்
பிராட்டியோவெண்ணெண் கலைக்கிறைவியழிவிலாப்
பெருமையொடு மிகவிளங்குந்
திணிவளரவித்தையெனு மகவிருளொழித்திடுஞ்
சீவகாருணியமதனாற்
செறிகின்றதுக்கமற வுபசாந்தவாழ்வுமருள்
செல்வியெனினுங் கருணையா
லணிவளரநின்சிறுமை நோக்காதழைத்தலா
லம்புலீ யாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியோ
டம்புலீ யாடவாவே. (ரு)

உலகிலைந்தொழில்புரியு மைவரையுமேவல்கொளு
முத்தமி முகத்துணின்றே

யுயிர்ப்பயிர்தழைத்திடப் பொழிகின்றநிலவொளியி
னோர்சிறிது பெற்றுநீயிங்
கிலகுமருதப்பணைப் பயிர்தழைக்கப்பொழிந்
திடுவையினுமெங்கடலைவி
யெழிற்கருணைவெள்ளந் ததும்புங்கடைக்கணரு
ளிற்றிவலை பெற்றெங்கணுங்
குலவுதண்ணளிவளர் சுதாகரனெனப்புவனி
கொண்டாடுமால்பெற்றனை
கூறினிவையாவுநின் றிறமையலவேயெங்கள்
கோமாட்டி பெருமையன்றோ
வலகின்மறைபுகழ்கின்ற சமிவனத்தம்மையுட
னம்புலீ யாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியோ
டம்புலீயாடவாவே. (சு)

தண்டம்.

நிறையுணர்வருட்குரவன் மனைவிபாலிச்சித்து
நேர்ந்திட்ட நிந்தையதனை
நெஞ்சினிடையெண்ணுது கன்னியழியாப்பெண்க
ணேயமுற் றதுவுமன்றி
யுறைதருகயற்கண்மெல் லியர்கள்கூட்டத்திருந்
தொழியாத வாஞ்சையுற்று

யோவாதகுறைநோயு முட்களங்கமுமுன்னை
யுற்றுப்பிரிந்ததில்லை
மறையுமியல்பன்றிவை யெலாமுணர்ந்திட்டுநின்
வாழ்வினைக்கருதியன்பால்
வாவென்றழைத்திட்ட மாற்றமேபொங்குமருள்
வாரிதியெனக்காட்டுமே
யறையுமகிலாண்டங்க ளீன்றதாய்முனியுமுன
மம்புலீயாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லையம்மையுட
னம்புலீயாடவாவே. (எ)

நாரணனவன்கமல நாபிநான்முகனெடிய
நாற்கோட்டுவாரணத்து
நாகநகராதிபன் சித்தர்கணநாதரொடு
நற்றவத் தலைவராவார்
பூரணசிதானந்த மாகுமத்துவிதாநு
பூதியர் விபூதிபுனையும்
பொன்னடித் தொண்டர்பலகோடாநுகோடியர்
புரிந்தெதிர் வணங்கிநிற்ப
நேரணவுமவர்தமைச் சற்றுநோக்காதுனை
நினைத்தழைத் தமையெண்ணிலை

நீயிவளைமதியா தினுந்தாமதிக்கிலோ
நின்மதிப்பெபருமொழியு
மாரணவியாதரிப் பாருன்னையினியிவளொ
டம்புலீயாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லையம்மையுட
னம்புலியாடவாவே. (அ)

மருமலர்க்கோதையெம் மம்மனைநினைக்கருதி
வம்மென வழைத்தபொழுதே.
வாராமையாற்கொண்ட கோபக்குறிப்பினை
மலர்க்கணிற் கண்டியாமித்
தருணமன்னுயுனது கருணைபொழிமுகமதி
தனைக்காண நாணமுற்றோ
தலையணிக்கஞ்சியோ சிறிதுதாழ்த்தனனென்று
சாற்றியொரு வாறுநின்னை
யுருவொடுந்தப்புவித் தோமின்னும்வெகுளிகொளி
னுவண்மகன் காற்படடநிற்
கொருகாலுமுய்வில்லை யென்றுணர்தியாதலா
லொப்புயர் விலாதமுதல்வி
யருண்மழைபொழிக்துயிர்ப் பயிர்காக்குமங்குலினொ
டம்புலீயாடவாவே

யருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியோ
டம்புலீயாடவாவே. (௯)

உளதாகியிலதாகி யொளியாகியிருளாகி
யுற்றவகி லாண்டங்களா
யுலவுமென்னம்மைநின் வாராமைகருதுற்
றுளத்துச்சினங் கொண்டதாற்
களமேவுகண்டர்தந் தலைமீதிருப்பினுங்
காற்படப்புரியுமற்றுக்
ககனமுற்றேறிடினுமொளிப்பினும்பற்றிக்
கருங்கடற் புகவீழ்த்திடும்
வள்மேவுங்கலா நிதியெனும்பெயரையும்
வலக்கணுக் கிரையாக்கிடும்
வையகத்தொருதினம் போலென்றுநினையிகழ
வைத்திடும் வாழ்வதெண்ணி
லளவறுபுகழ்ச்சமி வனத்தெங்களம்மையுட
னம்புலீயாடவாவே
யருமுல்லைநேர்நகைத் திருநெல்லைநாயகியோ
டம்புலீயாடவாவே. (௧௦)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

# அம்மானைப்பருவம்.

பொன்பூத்தநின்றிருப் படிவவெழிலாம்பெரிய
பொங்குகடலிற் கமழ்ந்து
பூத்தகைப்புண்டரிக நின்றெழூந்தழகொழுகு
புனிதவெள் ளோதிமங்கள்
மின்பூத்தகங்கையிற் பங்கயச்சுருளினை
விழைந்துற் றிகழ்ந்துமீளும்
விதமெனவுமக்கடலின் மீதெழுதரங்கமெறி
வெண்புற்புதங்க ளெனவு
முன்பூத்தநின்னையுந் தலைவனையுமுள்ளுணரு
முழுஞான நிட்டர்தம்பால்
முந்துசத்துவகுணஞ் செறியத்திரட்டியெறி
முறையெனவு நிறையுமடியார்க்
கன்பூட்டுசெமிவனத் தம்மையொளிர்வெண்டரள
வம்மானையாடியருளே
யாதாரமோராறின் மீதாருநெல்லையா
யம்மானையாடியருளே. (க)

நிலவுபொழிமதிமுக நிமிர்ந்தெறிந் திடுகோலை
நெடியகட் பார்வையால்வெண்

ணிறமொடுஞ்செம்மைநிற முங்கருமைநிறமுமிவை
நேர்ந்தொளி திகழ்ந்தெழுதலாற்
குலவுகுணமும்மைக் கடற்கணின்றெழுகின்ற
கொற்றமுத்தொழில் புரிவர்தங்
கோலங்குறிக்கமலை யக்குவட்டிழிதருங்
கொள்ளைவெள் ளருவியாடி
யுலவுமுகிலைத்தம பிடிக்குலமெனத்தழுவி
யூற்றுமத கரிகளஞ்ச
வோங்குறுதிணைக்கரங் கொண்டுசெய்மணிவீசி
யொழுகுறுந் தேனுறுபா
யலகில்வளமார்சமி வனத்தம்மைதரளமணி
யம்மானை யாடியருளே
யாதாரமோராறின் மீதாருநெல்லைபா
யம்மானை யாடியருளே. (உ)

கதிரவன்றீமதிய மென்னுமும்மண்டலங்
கண்டுகுள பதமதன்மேற்
காண்பரியவாயிரத் தோட்டாதனத்தினிற்
கணவனொடு கினையுள்குவோர்
முதுமூலவெங்கனற் றுபமறமதிபமுத
முதிரத் திரட்டிவீசு

முறையெனவு நின்கண்ணொளிபாய்தலானின்மணி
முயன்றுகை புனைந்ததெனவா
யிதழொளிபரத்தலிற் செம்மணிகுயின்றதா
யிளமுறுவ லொளியின்வயிரத்
திழைத்ததெனவாகிமன மெதுபற்றுமதுவாகு
மெனல்காட்ட வுங்களித்திட்
டதிவிருப்பொடுசமீ வனத்தம்மைவெண்முத்த
வம்மானை யாடியருளே
யாதாரமோராறின் மீதாருநெல்லையா
யம்மானை யாடியருளே. (௩)

முன்னைத்தவத்தினப ரோட்சசாட்சாத்கார
முதிருமநுபூதிபெற்ற
முதுஞானகுருவினை யடுத்துத்தனைக்காண
முயலுமாணாக்கனொத்து
மின்னொத்திருந்திலகு நின்னதரமாஞ்செய்ய
வித்துரும மதனைமுன்னீர்
வெண்டிரைப்பவளந் திரண்டுனக்கின்சுவை
விரும்பிக் கொடுக்குமங்கைப்
பொன்னொத்தபுண்டரிக மலரோடடுத்துப்
புகுந்துகாண்பது குறித்துப்

போதரும்பரிசென்ன நறுமணங்கமழும்
பொழிற்கழனி நகரின்மேவு
மன்னத்தின்மென்னடைகோ ளம்மைநீசெம்பவள
வம்மானையாடியருளே
யாதாரமோராறின் மீதாருநெல்லையா
யம்மானை யாடியருளே. (சு)

தொடருமாரோபழைதை யபவாதவுத்திபாற்
சுட்டற்று முத்திவேட்குந்
தூயர்பான்ஞானவடி வாய்ப்புக்குமீளாத
துணைவர்தம் பால்விடுக்கும்
படர்சிறைப்பைங்கிளி குதித்துவின் கரநின்று
பாய்ந்து மீளுதல்போலவும்
பன்னுகுழல்வேணியைக் காணவருபசுமறு
பதங்களை யெடுத்துவானத்
திடையெறிதன்மானவு மிலங்குமைந்தருமீதி
லிவருபைங் கொடிகளாகு
மென்னக்கிளைத்த தண் பைங்கதிர்பரப்பவென்
றென்றுமெதி ரன்பர்வினைபை
யடர்திருவருட்சமி வனத்தம்மைமரகதத்
தம்மானை யாடியருளே

யாதாரமோராறின் மீதாருநெல்லையா
யம்மானை யாடியருளே. (ரு)

கண்ணியவுயிர்க்கெலாந் தனுகரணபுவனபோ
கங்கள்பலவுந் தழைக்கக்
கண்டவகி லாண்டங்களைத்தனித்தனிமலர்க்
கைகளி னெடுத்தாடலா
விண்ணிடையெறிந்திடுத லொப்பச்சரோருக
விதாதா வியந்துபோற்ற
வேலையிற்றுயில்பவன் களிதூங்கவேள்விக்கு
வேந்தன்மலர் மாரிதூர்ப்ப
வெண்ணுமடியாருளங் குடிகொண்டகொற்றவா
ளீசர்கண் களிகூரவிங்
கேழையேந்தம்மையும் பொருளாவெடுத்தாள
வெண்ணுபு சுதன்மைபடகளா
யண்ணிவருதலைவிபல நவமணிகுயிற்றிமிளி
ரம்மானை யாடியருளே
யாதாரமோராறின் மீதாருநெல்லையா
யம்மானை யாடியருளே. (சா)

வேறு.

திருவுங்கலைவா ணியுமன்பிற்
சேவித்தெதிர்நின் றுளமகிழத்

தெய்வமகளிர் பற்பலருஞ்
  செங்கைகுவித்துத் தினம்போற்றக்
குருவினருளாற் றத்துவத்தின்
  கூட்டங்கழித்துக் குறிப்புணர்ந்தோர்
கூடிக்குலவித் தமிழ்வேதங்
  கொழிக்குந் திருவாசகம்பாடித்
தெருளுமனம் பூரிப்பவளர்
  தெய்வமணிமா தவர்மணிவான்
சிந்தாமணிதண் சமிவனத்துட்
  செல்வச்சுதன்மை மகளாகி
வருபெண்மணியென் னுட்கண்மணி
  மகிழ்ந்தாடுகபொன் னம்மனையே
மறையின்முடிவாழ் நெல்லைமணி
  மகிழ்ந்தாடுகபொன் னம்மனையே. (எ)

தேனுண்சுரும்பர் முரன்றாடச்
  செழியகமழ்பூங் கொன்றைமலர்த்
தெரியலாடுஞ் சடையாடச்
  சிற்றம்பலத்தி லெவ்வுயிர்க்குங்
கோனெம்பெருமான் குதித்தாடுங்
  குறிப்பினுடு முளமுவந்து

# திருநெல்லையம்மை பிள்ளைத்தமிழ்.

கூடியாடு மடியார்தங்
கூட்டத்தொழியா வுவகையொடு
யானுங்கலந்து நின்றாட
விருள்சேர்வினைபோக் கிடுமுறுவ
லிளவெண்ணிலவு பொழிந்தாட
விமையோர்நறுமென் மலர்தூற்றி
வானின்றாட வென்னம்மை
மகிழ்ந்தாடுகபொன் னம்மனையே
மறையின்முடிவாழ் நெல்லைமணி
மகிழ்ந்தாடுகபொன் னம்மனையே. (அ)

வெள்ளிமலைமீ திருந்துயர்பொன்
மேருமலையை வில்லாக
விரும்பியெடுத்துத் திருமேனி
வேதமலையென் றிருந்தபிரா
னுள்ளமகிழ மலைமகளா
யொளிருநீல மணிமலையென்
றுவக்கத்தோன்றி ஞ்தமலையை
யுதவுங்கருணை மலையேயுட்
கள்ளமறுநல் லடியர்தமைக்

கலவாதொழிய *மூவினையைக்
கடிதுவாரி மலர்க்கைகொடு
ககனத்தெறியுஞ் செயல்போல
வள்ளமணிவாய் முத்தரும்ப
மகிழ்ந்தாடுகநீ லம்மனையே
மறையின்முடிவாழ் செல்லமணி
மகிழ்ந்தாடுகநீ லம்மனையே. (௬)

பொருவருமுலக மளித்தருள்பூரணி
யாடுக வம்மனையே
போதவுருக்கொளு நாதர்புரத்தவ
ளாடுக வம்மனையே
திருவளர்புருமத் தியிலொளியாயவ
ளாடுக வம்மனையே
செப்பவளொடுவா ணியுமடிதொழுமவ
ளாடுக வம்மனையே
தருநிழலிமையவ ருறைதரவருள்பவ
ளாடுக வம்மனையே

---

* சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம்.

தலைவர்கள்மூவரு மெதிர்கொளவருமவ
ளாடுக வம்மனையே
யருமறைமுடிவினி லமர்தருமம்மனை
யாடுக வம்மனையே
யணிவளர்சீரிய சமிவனநாயகி
யாடுக வம்மனையே. (கூ)

அம்மானைப்பருவம் முற்றிற்று

## நீராடற்பருவம்.

மலிகின்றகருணைவளர் நின்கண்களுக்குவமை
வைத்திவண் கூறலெல்லாம்
வண்டமிழ்க்கவிஞர்புனை முகமனேயன்றியணு
மாத்திர மொவ்வாவாதலா
னலிகின்றவுள்ளத் துடைந்துசெங்கயலெலா
நாணமுற் றயல்குதிப்ப
நாடிக்கருங்குவளை வாடிக்கணீர்மல்கி
நாடொறு முகங்குவிதர
மெலிகின்றநுண்ணிடைச் சேடியர்கள்கமலத்தில்
வேறுகமலங் கவிழ்த்த

விதமென்னநின்னிருகை மென்மலர்க்கரமேந்த
விண்ணதியி னுஞ்சிறந்து
பொழிகின்றமதுநதி யெழிற்றண்டுறைப்புதிய
புனிதநீ ராடியருளே
போகபூமியரும்விழை வாகுபூங்கழனியாய்
புனிதநீ ராடியருளே. (க)

மின்பூத்ததிருமேனி மரகதத்தொளியினிரு
வேறுருக்கமல மலர்கள்
விரிநீலமலரொடு மயங்கலானின்னருள்
விழிக்கடையி னேவல்புரியுந்
தென்பூத்ததிருவினொடு வாணியிவர்தம்முறையு
டேர்கிலா தலமந்துபின்
செய்யவிதழ்வெண்ணகையி னொளியாற்கயிற்றரவு
தீர்ந்தெனத் தேரச்செலூஉ
முன்பூத்தமீன்கணத் தொடுமீன்கணஞ்செறிய
மோதியைக் தருமுறித்து
முதிர்திரைக்கைகளாற் றன்னிருகரைக்கணு
முடக்கிப் புதைத்தொழுகுறும்
பொன்பூத்தமதுநதி யெழிற்றண்டுறைப்புதிய
புனிதநீ ராடியருளே

போகபூமியரும்விழை வாகுபூங்கழனியாய்
புனிதநீ ராடியருளே. (உ)

கொங்குதேர்வண்டினம் பாடுங்கருங்குழற்
கோதையிகுளையர்க ணின்மேற்
குளிர்தந்துகமழ்தரச் சிவிறிவீசுஞ்செழுங்
குங்குமத்துளி யெங்குமார்ந்
தங்கணன்செவ்வான நிகர்மேனியெழிலா
யனைத்துஞ் சிவாகாரமே
யாமெனநெரிப்பவான் குன்றின்வீழருவிபல
வாயினும் வியட்டிதன்னிற்
பங்கமுறுபலசீவ ருஞ்சமட்டியிலொரு
பரப்பிரம மாதலொப்பப்
பரவியொன்றாய்க்கலந் தயன்வெள்ளமெனவிண்
படர்ந்தலைகள் பணிலம்வீசப்
பொங்கிவருமதூநதி யெழிற்றண்டுறைப்புதிய
புனிதநீ ராடியருளே
போகபூமியரும்விழை வாகுபூங்கழனியாய்
புனிதநீ ராடியருளே. (ரு)

திகழுநிலவெறிபணில முத்தமுங்கமழ்கின்ற
செங்குமுதமுங் கழைகளுங்

திரடடங்கோட்டுமத கரியினெடுசிங்கமுஞ்
    செய்யதாமரை மலருநின்
பகருமிளவெண்முறுவல் பவளவிதழ்பசியதோள்
    படர்சுணங் கவிருநகிலம்
பணியுமிடைதிருவடிக ளெனுமவயவங்களைப்
    பார்த்துவெட்கிப் பணிதலே
நிகரமற்றவைகளை யெடுத்துனடியிணைமிசை
    நெடுந்திரைக் கையின்வீசி
நிலவுறுகடற்றலைவ னின்புறச்செல்கின்ற
    நேரிழைகடுக்கு மென்னப்
புகழ்பெருகுமதநதி யெழிற்றண்டுறைப்புதிய
    புனிதநீ ராடியருளே
போகபூமியரும்விழை வாகுபூங்கழனியாய்
    புனிதநீ ராடியருளே. (சு)

கடலனையகருணைக் கடைக்கணின்முத்தொழிற்
    காவலர்க்கருள் புரியுநின்
கருத்துட்கணங்கறுக் கினுமுய்தலரிதெனக்
    கழறுதல்கடைப் பிடித்து
மடலவிழ்கடுக்கையங் கண்ணியணிகொண்கர்முடி
    வைத்திட்ட கங்கைநதிநின்

மனத்துறுசினந்தவிர்ப் பானெண்ணிநின்றுதை
மலையனைய னற்றிருமுகந்
தடையறப்பெற்றுநவ மணிமுதற்பொருளுமெதிர்
தந்திருகரங் குவித்துச்
சரணமெனவந்துநின் றிருவடிக்கமலங்க
டாழ்ந்திடற் குறுவதேய்ப்பப்
புடைபெருகுமதுநதி யெழிற்றண்டுறைப்புதிய
புனிதநீ ராடியருளே
போகபூமியரும்விழை வாகுபூங்கபூனியாய்
புனிதநீ ராடியருளே. (ரு)

அரவிந்தமென்கொடியு மணியும்புனைந்துவை
யகமுண் டகங்களித்தாங்
கலைவளையுநேமியொடு தண்டுசிலைவாளையு
மடைந்துபுள் ளூர்தலுற்றுன்
மரகதத்திருமேனி யொளிபாய்தலிற்பசிய
வண்ணமும் பெற்றுநின்னை
மகிழ்வினொடுகொண்பது குறித்துவருமாயனைமுன்
வருமுறைமை பாராட்டல்போற்
பரவரியதனிமுதற் கொற்றவாளீசரொடு
பாகந்தணந்து கழனிப்

பயிரிஞெடுமிக்கபல் லுயிரும்புரந்தருள்
பராபரை கனிந்தவமுதும்
பொருவரியமதுநதி யெழிற்றண்டுறைப்புதிய
புனிதநீ ராடியருளே
போகபூமியரும்விழை வாகுபூங்கழனியாய்
புனிதநீ ராடியருளே. (சு)

வேறு.

நயக்குங்கருணை யின்றிவளர்
நகிலந்தாங்கா தறவருந்து
நடுவினிலைமை நோக்காது
நறும்பூங்குழலின் மென்மலர்த்தார்
வயக்குங்குமத்தோ ளாடவர்தாம்
வனையவரவு முனிந்தவர்தம்
மார்பிலுதைப்ப நோமெனக்கை
மலராற்றுங்க மகிழ்ந்துமுத்தம்
பயக்குமடவார் புடைசூழப்
பணிலம்பலசூழ்ந் திடநடுவெட்
பாஞ்சசனிய மெனவிளங்கிப்
பல்லமறையுந் தினந்துதித்து
வியக்கும்புகழார் சமிவனத்துள்

விமலைபுதுநீ ராடுகவே
வினைதீர்த்தருளு மதுநதியின்
வெள்ளப்புதுநீ ராடுகவே. (எ)
ஞானாசிரிய னருட்கடைக்க
ணாட்டம்புகுந்து பரஞான
நதியுட்படிந்து பொறிவழியே
நாடாதொழிந்து பவஞ்சமெலாந்
தானாயிருக்கு ஞானியர்க
டைபற்றெழுமா நந்தவெள்ளத்
ததும்பியாடத் தாமரைப்பூந்
தனித்தோழியருந் தழைந்தாட
வூனாயுயிரா யுயிர்க்குயிரா
யுள்ளும்புறமு நிறைந்தோங்கி
யுலவாதேழை யெனதுளமு
முவப்பவொளிரும் பெருமாட்டி
மேனாடுவக்குஞ் சமிவனத்துள்
விமலைபுதுநீ ராடுகவே
வினைதீர்த்தருளு மதுநதியின்
வெள்ளப்புதுநீ ராடுகவே. (அ)

வேறு.

இன்னறவுண்டளி பாடுசரோருக
வேந்திழை யாரிருவ

றென்னமையெங்கட் கென்பணியென்று
　னினைப்பத மலர்தொழவே
அன்னவர்வேண்டு வரங்களனைத்து
　மளித்தவ ருள்ளூறு
மாரமுதேயென தாருயிரோமுய
　லரியதவப் பேறே
நின்னைநினைந்தறி யாதவருள்ள
　நிறைந்தி ருட்செறிவாய்
நின்றெளியேனுள மென்றுமுவப்ப
　நிழற்று பெருந்திருவே
பொன்னவிர்தெண்டிரை மதுநதிவெள்ளப்
　புதுநீ ராடுகவே
பூதலமேத்திடு சமிவனநாயகி
　புதுநீ ராடுகவே. (சு)

திருவேதெய்வ சிகாமணியேவினை
　செறிநீ ராடுகவே
தேனேயருள்பொழி விழியானேவினை
　செறிநீ ராடுகவே
கருவேயொழிவறு கருணாலயமே
　கமழ்நீ ராடுகவே

காரணிபுகழ்தரு மாரணியேவினை
  சமழ்நீ ராடுகவே
அருளேயணியே யாரமுதேபழ
  கார்நீ ராடுகவே
அகிலமெலாமு மளித்தருளன்னையழ
  கார்நீ ராடுகவே
பொருளேநிறைவே மதுநதிவெள்ளப்
  புதுநீ ராடுகவே
பூதலமேத்திடு சமிவனநாயகி
  புதுநீ ராடுகவே. (கய)

நீராடற்பருவம் முற்றிற்று.

## ஊசற்பருவம்.

மன்னுமகிலாண்டம் படைத்தருளுநின்சத்து
  வகுணமிருபாலு மோங்கி
வாள்விதிர்த்தென்னவிளிர் வச்சிரமணிக்கால்கள்
  வகைபெறநிறுத்தி வாய்ப்ப
மின்னிராசதநின் றுருக்கொடுதிரண்டதன்
  மேற்கிடக்கவிர்த வெணவே

விளங்குபிரவாளவிட் டங்கவினவிட்டதின்
வீழ்கதிர்த்திரள்க ளென்னத்
துன்னுசெம்மணிவட மிசைத்ததின் மீதிற்
றுலங்குகின் சித்திமானத்
தூகித்திலப்பலகை யிட்டதனினுப்பணிற்
றேன்றுதிரு வருளீதெனப்
பொன்னொளியதிருமேனி கொண்டிருந்தென்னம்மை
பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (௧)

தெண்ணிலவுபொழிகின்ற வெண்டரளமணிவடஞ்
சேரப்பிணைத் தொளிகிலாஞ்
செப்பதுமராகக் கவின்றிகழ்மணிப்பலகை
செறிதருஞ் சிங்காதனத்
துண்ணிலவுமாதார மாறெனச்சொல்லுமா
றுள்ளதா மாயிரந்தோட்
டலவாதசெய்யபங் கடமீதிருந்தன்ப
ருள்ளமொடு மெய்குளிர்தரக்
கண்ணிலவுகாட்சிதந் தருளுதல்கடுப்பக்
களித்திருந்தருளி யெம்மைக்

காக்குங்கடைக்கணருள் பெருகத்திறல்வீர
　　கவுரியன் கைக்கவர்ந்த
புண்ணிலவுகொற்றவா ளீசர்பான்மருவுமயில்
　　பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
　　பொன்னூச லாடியருளே. (உ)
திவளொளிபரப்பியிருள் பருகுமிளவெயிறழைத்
　　திட்டசெம்மணி வடத்திற்
சேர்த்தமாமணியா சனத்தமரர்போற்றத்
　　திருந்துற விருந்துலகெலாந்
தவருதளிக்குமலை யத்துவசனற்றவத்
　　தாலவணியற்று வேள்வித்
தழற்பிழம்பிடையிற் றடாதகைப்பெயர்கொடு
　　தனித்துமுன் றோன்றல்காட்டக்
குவலயமலர்ந்துகமழ் கழனியிற்செழியபைங்
　　கூழினி தளித்தருளிநங்
கொற்றவாளீசரொரு பங்கிலுறைசங்கரி
　　குமாரகுரு வைத்தருமவள்
புவனைதிரிபுரைவாலை நெல்லைநாயகியம்மை
　　பொன்னூச லாடியருளே

பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (ங)

மருவுவெண்ணிலவுபொழி ரத்திலக்குவைசூழ
வைத்துப்பதித்து நடுவெண்
மாமணிபரப்பியொளிர் பைங்கதிர்விரித்திட்ட
மரகதப் பலகைமீதா
ரருளொடுமகிழ்ந்தெழுந் தருளியொளிதிகழ்வரம்
பரியகற் பூரத்தினு
லமையப்புரிந்துகமழ் குங்குமங்கத்தூரி
யளவளாய்ச் செய்தமைத்த
முருகுவளராலவா லத்திடைச்செழியநறு
முல்லையங்கொடி முகிழ்த்து
முத்தெனமலர்ந்தெழி றழைத்தசைந்தாலென்ன
முகமலர்ந்தயன் மாலொடும்
புருகூதனுதியர் துதிப்பக்களித்தெழிற்
பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (ச)

கதிரொளிபரப்பியெழு சதகோடிசூரியர்கள்
கண்கவர்வனப்பு வாய்ந்து

கவினுறவுறைந்தெனைப் பலமணிகுயின்றபல
கையின்மீதிருந்து மலர்வாய்
வதிதருந்திருவினொடு கலைமகளுமிருபுறம்
வந்தனித்தருகு நின்று
மணிவடந்தொட்டசைத் திடவுளங்களிகூர்ந்து
வானவருமேனை யோருந்
துதிசெயச்சென்னியிற் குவிகையகலாதுதொழு
தொண்டருள் ளுருகியாடச்
சுத்தநிர்க்குணபரஞ் சோதியொருபாகந்
துலங்குசிவ சங்கரியுமை
புதியமணமலர்குழற் றிருநெல்லைநாயகி
பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (ரு)

சலதிக்குளாஞ்சங் குயிர்த்தவோரினமாய
தரளங்குயிற்றி யொளிருந்
தண்ணிலவுபொழியுமுழு மதிநிகர்த்தழகுலாந்
தவிசதனில் வீற்றிருந்து
கலனுக்கொர்கலனாகு திருமேனியென்னுமொர்
கடற்கட் கவின்றுதோன்றிக்

காவதங்கமழ்நீல வுற்பலமலர்ந்தனைய
காட்சிதக் தடிமைபூண்டார்
நலமுற்றிடக்கருணை யூற்றிருந்தொழுகுமெழி
னாட்டமொடு கழனிகாப்பா
ளளினங்கள்கண்டுதேன் பொழிதரவரம்பிடை
நயந்திருந் தொலிநூபுரப்
பொலனுற்றசீறடி பெயர்த்தருளுநெல்லையாய்
பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (சு)

சதுமறையினந்தம் புகழ்ந்தினமுமறியாத்
தனிப்பரம் பொருளாகியோர்
சச்சிதாநந்தமய மாகியடியவருளத்
தணவா திருந்தருளுநின்
பதியெனப்புகலுநங் கொற்றவாளிசர்தம்
பங்கயக்கண் களிப்பப்
பற்றியருகுற்றவிரு தோழியர்மணாளராம்
பாற்கடற்பள்ளி கொள்வோர்
மதுவளர்சரோருகத் தாரிருவரோதிர்நின்று
வாழ்த்திக் குதூகலிப்ப

வந்தடிபணிந்தமர ராதியேனையர்வேண்டு
வரமெலாம் பெற்றுவாழ்த்தப்
புதுமலர்க்கரியகுழ னெல்லைநாயகியம்மை
பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (எ)

மொழியுமறையந்தத்தி னுண்மைநெறிபிறழாது
முற்றுங்கடைப் பிடித்த
மூதறிஞர்சாதனக் கானூன்குநாட்டியதில்
முதிர்சவண விட்டமிட்டுத்
தழையசிறைமெய்ஞ்ஞான மணிவடம்பூட்டிநற்
றடையற்ற வாநந்தமாந்
தவழ்பலகைசேர்த்திச் சொரூபவரியாதனந்
தன்னிலோ ரன்னவடிவாய்
விழைவுடனிருந்தாடு மென்னம்மை வினையிருள்
விழுங்குபுன் னகையிளநிலா
விரிந்தொளிரு மதிமுகத்துற்றமருண்மானென
விளங்கெழி னெடுங்கடைக்கண்
பொழிகருணையூட்டி யெமையாளும்பிராட்டிநீ
பொன்னூச லாடியருளே

பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (அ)

முன்னைத்தவத்தினர்கள் முத்திநெறிவேண்டியுனை
முன்னித்துதிக்க வன்பின்
முகமலர்ந்தருளினிய வருள்வெள்ளமேலாட
முன்னவர்செய் வினைகள்யாவுந்
துன்னித்தரிப்பிட மிலாதந்தரத்திற்
சுழன்ருட வென்றுநீங்காத்
தொடர்சனனமரணமும் புகலின்றியந்நெறிச்
சூழ்ந்தாட மாயன்முதலோர்
சென்னிக்கணத்தங் குவித்தாடமன்றிடைத்
தேவதேவனை யாட்டிமுன்
றேத்துநின்ருடும் பிராட்டியெவ்வுலகுஞ்
செறிந்துயிர்க் குயிராயினுய்
பொன்னிற்புனைந்துமிளிர் நவமணிகுயிற்றியொளிர்
பொன்னூச லாடியருளே
பூதலமெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (கூ)

அன்புருவமாந்தொண்டர் வினையிருட்செறிவினை
யகற்றுபூங் குழலுமுலகத்

தாருயிர்ப்பயிர்தழைப் பான்கருணைபொழிவிழியு
மம்புலியி னொளிருமுகமு
மென்பொருபெணுக்குபா லொழுகுகுயமுஞ் சுதன்மை
யின்னமுதுண் வாயினகையு
மெண்ணிலாவண்டங்கள் வைத்தளித்திடுமகடு
மிருகமலகரமு நினைவோர்
புன்பவக்கடல்சுவற் றடிமலருநிலவமெய்ப்
போதமோர் மெய்க்கொண்டெனப்
பொலிமுத்திராமலிங் கப்பெயர்த்தேசிகன்
போற்றப்பிர சன்னமாய்முன்
பொன்பரவவந்துநின் றருளூட்டுநெல்லையாய்
பொன்னூச லாடியருளே
புகலெலாந்தொழுது புகழ்சமிவனத்தம்மை
பொன்னூச லாடியருளே. (௧0)

ஊசற்பருவம் முற்றிற்று.

திருநெல்லையம்மை பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE )